சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ்
21–4–2010 அன்று
மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் படித்தளித்த அறிக்கை.

....

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முல்லைப் பெரியாறு அணை பற்றிய வழக்கில் 18–2–2010 அன்று உச்ச நீதி மன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு; அதிகாரம் அளிக்கப்பட்ட குழு ஒன்றினை அமைத்து ஆணையிட்டது.

இதையொட்டி 5–3–2010 அன்று மத்திய அரசு தமிழக அரசின் சார்பில் ஒரு உறுப்பினரை நியமனம் செய்ய தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியது.

இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்களும் ஏற்கனவே உச்ச நீதி மன்றத்தினால் முடிவெடுக்கப்பட்ட நிலையில் புதிதாக இன்னொரு குழு அமைக்கத் தேவையில்லை என்று கருதி, உச்ச நீதி மன்றத்தின் உத்தரவைத் திரும்பப் பெற தமிழக அரசின் சார்பில் உச்ச நீதி மன்றத்தில் 8–3–2010 அன்று தாக்கல் செய்த மனுவினை (Recall Petition) உச்ச நீதி மன்றம் ஏற்றுக் கொள்ளாத நிலையில்; 5–4–2010 அன்று மத்திய அரசு மீண்டும் தமிழக அரசை மேற்படி குழுவுக்கு ஒரு உறுப்பினரை உடனடியாக தமிழக அரசின் சார்பாக பரிந்துரை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது.

இந்தப் பிரச்சினை குறித்து தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் தெரிவித்த கருத்தினைக் கேட்டும் – தமிழக அரசு உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்த முல்லைப் பெரியாறு குறித்த வழக்கின் முடிவு தான் தமிழகத்துக்கு முக்கியம் என்ற நோக்கத்தோடும் – உச்ச நீதி மன்றம் அறிவித்த குழுவிலே தமிழக அரசின் சார்பில் பங்கேற்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் தமிழக அரசின் சார்பாக ஓய்வு பெற்ற உச்ச நீதி மன்ற நீதியரசர் திரு. ஏ.ஆர். லெட்சுமணன் அவர்கள் இடம் பெறுவார்கள்.

..................................................